ஒப்பரவு அருளடையாளத்தைப் பெறுபவர்கள் கடவுளுக்கு எதிராகத் தாம் செய்த பாவங்களுக்கு, அவரது இரக்கத்தால் மன்னிப்புப் பெறுகிறார்கள்; பிணியாளரின் துன்பத்தைத் தணிக்கவும், அவர்களுக்கு வாழ்வளிக்கவும், நோயில் பூசுதலாலும் திருப்பணியாளரின் வேண்டலாலும் திருஅவை முழுவதும் துன்புற்று மாட்சிபெற்றவரான ஆண்டவரின் அடைக்கலத்தில் அவர்களை வைக்கிறது. (யாக 5:14-16). மேலும், கிறிஸ்துவின் துன்பங்களுடனும் சாவுடனும் மனமுவந்து தம்மைத் தாமே அவர்கள் ஒன்றித்து (உரோ 8:17; கொலோ 1:24; 2திமோ 2:11-12; 1பேது 4:13) இறைமக்களின் நலனுக்கு உதவுமாறு அவர்களை ஊக்குவிக்கிறது. நம்பிக்கை கொண்டோருள் திருப்பணியாளர்களாகத் திருநிலைப்படுத்தப் பெறுவர்கள் கடவுளின் வார்த்தையாலும் அருளாலும் திருஅவைக்கு அருள்பணியாளர்களாய் நின்று தொண்டுபுரிய கிறிஸ்துவின் பெயரால் நியமிக்கப் பெற்றிருக்கின்றனர். இறுதியாகக் கிறிஸ்தவ மணமக்கள் திருமணமென்னும் அருளடையாளத்தால் கிறிஸ்துவுக்கும் திருஅவைக்கும் இடையிலுள்ள ஒற்றுமை, வளமிக்க அன்பு ஆகிய மறைபொருட்களின் அடையாளமாக நின்று அதில் பங்கு கொள்கின்றனர் (எபே 5:32) இந்த அருளடையாளத்தால் தங்களது திருமண வாழ்விலும் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதிலும் வளர்த்து உருவாக்குவதிலும் தூய்மைநிலை அடைய ஒருவருக்கொருவர் உதவுகின்றனர். ஏனெனில், திருமண இணைப்பால் உருவாகிறது குடும்பம்: இக்குடும்பத்தில்தான் மனித சமுதாயத்தின் புதுக் குடிமக்கள் பிறக்கின்றனர். இல்லத் திருஅவை என அழைக்கப்படக்கூடுமான குடும்பத்தில் பெற்றோர் தமது சொல்லலாலும் முன்மாதிரியாலும் தங்கள் பிள்ளைகளுக்கு முதன்முதலில் நம்பிக்கையைப் போதிப்பவர்களாக இருப்பார்களாக. திருப்பணிக்கான அழைத்தலாக இருந்தால் அவர்கள் தனிப்பட்ட அக்கரையுடன் அதைப் பேணி வளர்க்கவேண்டும்.

நிறைவாழ்வுதரும் இத்துணைச் சிறந்த வழிவகைகளால் கிறிஸ்துவ மக்கள் அனைவரும் வலுவூட்டப்பெறுகின்றனர். இவர்கள் எந்நிலையில் இருப்பினும் எப்படி இருப்பினும் ஒவ்வொருவரும் தமக்குரிய முறையிலே, தந்தைக்கொண்டிருக்கும் இதேத் தூய்மைநிலையின் நிறைவிற்கு ஆண்டவரால் அழைக்கப்பெறுகிறார்கள்.

### என்: 12 இறைமக்களிடையே நம்பிக்கை உணர்வும் அருள்கொடைகளும்

12. கிறிஸ்துவைப் பற்றிய உயிரோட்டமுள்ள சாட்சியத்தைச் சிறப்பாகத் தமது நம்பிக்கை மற்றும் அன்பு வாழ்வால் பரப்புவதாலும், அவரது பெயரை வாயாரப் போற்றும் புகழ்ச்சிப் பலியை அவருக்குச் செலுத்துவதாலும் (எபி 13:15) கடவுளின் தூய மக்கள் கிறிஸ்துவின் இறைவாக்கு உரைக்கும் அலுவலில் பங்குகொள்கின்றனர். தூயவரான கடவுளால் அருள்பொழிவு பெற்று நம்பிக்கை கொண்டோர் அனைவரின் கூட்டம் (1 யோவா 2:20) உண்மையின் ஆவியால் தூண்டப்பெற்று வலுப்பெறும் நம்பிக்கை உணர்வுடன் இறைமக்கள் திருஅவையின் திருஆசிரியத்திற்கு உண்மையுடன் பணிந்து, அதனால் வழிநடத்தப்படும்போது மனித வார்த்தையை அல்ல, மாறாக உண்மையிலேயே இறை வார்த்தையைப் பெற்றுக் கொள்கிறார்கள் (1 தெச 2:13);

மேலும், அதே தூய ஆவியார் அருளடையாளங்கள், பணிகள் மூலம் இறைமக்ககளைத் தூய்மைப்படுத்துகிறார்; அவர்களை வழிநடத்தி; நற்பண்புகளால், அவரே தம் கொடைகளைத் தம் விருப்பம் போல் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிக்கிறார்" (1 கொரி 12:11). இவற்றால் பல்வேறு அலுவல்களையும் கடமைகளையும் மேற்கொள்ள அவர்களுக்குத் தகுதியையும் ஆர்வத்தையும் அளிக்கிறார். "பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது" (1கொரி 12:7) என்பதற்கு ஏற்பத் திருஅவையின் மறுமலர்ச்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் அவர் இந்த அருளை வழங்குகிறார். இந்த அருள் கொடைகள் திருஅவையின் தேவைகளுக்கு மிக ஏற்றனவையாகவும் பயனுள்ள வையாகவும் இருப்பதால் இறை மக்கள் இவற்றை நன்றியுடனும் மகிழ்வுடனும் பெற்றுக் கொள்ள வேண்டும். அளவு கடந்த துணிவு கொண்டு அவற்றிலிருந்து பலன்களை எதிர்பார்க்கவும் கூடாது. மாறாக, அவை உண்மையானவையா என்பது பற்றியும் அவற்றை ஒழுங்குடன் பயன்படுத்துவது பற்றியும் தீர்மானம் செய்வது திருஅவையில் தலைமை வகிப்பவர்களுக்கே உரியது. தூய ஆவியின் செயல்பாட்டைத் தடுத்துவிடாமல், அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து நல்லதை ஏற்றுக்கொள்வது சிறப்பாக இவர்களைச் சார்ந்தது (1 தெச 5: 12, 19-21).

INTERNAL CIRCULATION ONLY
BUL 49/2023

தயாரித்தவர்கள்: செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு Austin Flannery OP, 1975
திருத்தம்: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)
மின்னஞ்சல் directorapikl@gmail.com

2 & 3 டி ம்பர 2023
திருவருகைக் காலம் முதலாம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH
newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
திருஅவையும் தன்னார்வ தொண்டும்

மாதாந்திர நிகழ்வு:
திருவருகையும் கிறிஸ்து பிறப்பும்



# திருஅவை

## இரண்டாம் வத்திக்கான் ங்க திருஅவை கோட்பாட்டு விளக்கம்

21 நவம்பர் 1964 திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

### என்: 11 அருளடையாளங்கள் வழியாகச் செ யல்படும் பொதுத்திருப்பணி நிலை

திருப்பணிநிலைக் குழுவின் தூயப் பண்பும் உயிர் அமைப்பும், அருளடையாளங்கள் மூலமும் நற்பண்புகள் மூலமும் செயல்படுகின்றன. நம்பிக்கை கொண்டோர் திருமுழுக்கால் திருஅவையுடன் இணைக்கப்பட்டு, அழியா முத்திரையால் குறிக்கப்படுகிறார்கள். திருஅவை வழியாகக் கடவுளிடமிருந்து தாங்கள் பெற்றுக் கொண்ட நம்பிக்கையை உறுதிப் பூசுதல் எனும் அருளடையாளத்தால் இன்னும் நெருங்கிய முறையில் திருஅவையுடன் பிணைக்கப்பட்டு தூய ஆவியின் தனி வல்லமையால் உறுதிப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகளாகச் சொல்லாலும் செயலாலும் நம்பிக்கையைப் பரப்பவும் பாதுகாக்கவும் கிறிஸ்தவ வாழ்வனைத்தின் ஊற்றும் உச்சியுமான அதோடு தம்மையும் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கின்றார்கள். இவ்வாறு ஒப்புக்கொடுப்பதாலும், நற்கருணை உட்கொள்வதாலும் அனைவரும் ஒரே வகையில் அல்லாமல், ஒவ்வொருவரும் தத்தமக்குரிய முறையில், திருவழிபாட்டுச் செயலில் தம் பங்கை நிறைவேற்றி மக்களின் ஒற்றுமையை வாழ்விலே வெளிப்படையாகக் காட்டுகின்றனர்.